திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : மேலப்பாளையத்தில் இருக்கிற ஏழை முஸ்லிம்கள் முனிசிபல் வரியை தாங்கமுடியாமல் இருக்கும் காரணத்தினாலே, அவர்கள் விரும்புகிறபடி இந்த முனிசிபாலிடியை மூன்று நகர பஞ்சாயத்துகளாக மாற்றிக் கொடுக்க நம்முடைய அமைச்சர் அவர்கள் அனுதாபத்துடன் கவனிப்பார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இந்த நகராட்சியை மூன்று ஊராட்சி மன்றங்களாக மாற்றினாலும்கூட, பஞ்சாயத்து சட்டப்படி எல்லா வரிகளுக்கும் உட்படத்தான் செய்யும். வரியிலிருந்து தப்பும் அடிப்படையில்தான் இதை ஊராட்சி மன்றங்களாக மாற்றவேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்கள் கேட்கிறார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

Political sufferers (Kanyakumari district)

* 112 *Q.*—SRI A. KUNJAN NADAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any memorandum from the Kanyakumari District Political Sufferers' Association for help;

(*b*) if so, the action taken thereon;

(*c*) whether the Government have received any list of political sufferers from the District Congress Committee President, Kanyakumari district; and

(*d*) if so, whether the Government will lay on the table a copy of the list?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes;

(*b*) The Secretary, Kanyakumari District Political Sufferers' Association has been requested to instruct the persons whose names are found in the list to send individual representations to Government containing the details of their participation in the freedom struggle of the country;

(*c*) No; and

(*d*) Does not arise.

Scholarships (income limit)

* 113 *Q.*—SRI V. S. S. MANI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to raise the present income limit of Rs. 1,500 per annum applicable to students applying for State scholarships?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

திரு. வா. சொ. சு. மணி : முன்பு ரூ. 1,500 வருமானம் உள்ள என்.ஜி.ஓ-க்களின் சம்பள விகிதம் பே கமிஷன் ரிபோர்ட்டுக்கு பிறகு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே அவர்கள் ரூ. 1,500-க்கு மேலே வருமானம் காட்டவேண்டியிருக்கிறது. அந்த நிலையில் அவர்கள் சலுகை அடைய

4th July 1962]

முடியாமல் இருக்கிறார்கள். அதற்கு ஏதாவது வழிவகை செய்ய முடியுமா? இந்த ஆண்டு அவர்களுக்கு ஏதாவது வழி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: அரசாங்கம் நிதி நிலைமைக்கு தக்கவாறு எவ்வாறு உதவி செய்ய முடியுமோ அவ்வாறு மாணவர்களுக்கு உதவி செய்துகொண்டுவருகிறது. சோசலிஸ சமுதாய பாணி அமைப்பில் ஏதாவது வசதி உடையவர்கள் வருமானம் வரும்போது கொஞ்சம் கொடுக்கத்தான் வேண்டும்.

விவசாய உற்பத்தி கருத்தரங்கு

*114 கேள்வி.—**திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-ல் உதகையில் நடந்த தென் பிராந்திய விவசாய உற்பத்தி கருத்தரங்கில் என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Since the seminar was convened by the Government of India, the proceedings and conclusions reached are awaited from them.

திரு. ஜே. மாதா கவுடர்: உதகையில் நடந்த தென் பிராந்திய விவசாய உற்பத்தி கருத்தரங்கில் நம்முடைய மாகாணத்தில் என்னென்ன வகையிலே உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்பதைப்பற்றி நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு தெரிவித்திருக்கிறார்களா? அதன் காரணத்தை ஒட்டி அண்மை மாகாணத்திலிருந்து நம் மாகாணத்திற்கு தண்ணீர் கொண்டு வருவதன் கருத்தைப்பற்றி விளக்கப்பட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது விவசாய உற்பத்தி பெருக்கத்தைப்பற்றிய கருத்தரங்கு. இதில் நீர்ப்பாசன விஷயங்கள் வந்திருக்க முடியாது. நம்முடைய அரசாங்கப் பிரதிநிதிகளும் இந்த கருத்தரங்கில் கலந்துகொண்டார்கள். இந்த கருத்தரங்கின் நடவடிக்கை விவரங்கள் இன்னும் இந்த அரசாங்கத்திற்கு வரவில்லை.

Municipal Council, Madurai

*115 Q.—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(a) whether the Government have received any representation from the Madurai Municipal Council to increase the number of seats in the Council on population basis; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI S. M. A. MAJID: (a) Yes, Sir.

(b) The matter is under consideration.

திரு. கே. மூக்கையா தேவர்: அது எப்பொழுது அதிகப்படுத்தப்படும்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அது பரிசிலனையில் இருக்கிறது. இப்பொழுது சொல்வதற்கில்லை.